07.12.2024

O.S.No.184/2015

வா.சா.2 .திரு.சிவானந்தம்   த.பெ.சின்னையா பிள்ளை

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு**  விசாரணை

எனது சொந்த ஊர் புரண்டிபட்டி. மானாவாரி நிலம் என்றால் மழைபெய்தால் மட்டும் விவசாயம் நடக்கும் பகுதி. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 1 ஏக்கர் 98 சென்ட் மானாவாரி நிலத்தில் விவசாயம் செய்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துகள் அமைந்துள்ள கண்மாய்க்கும் நான் கூறியுள்ள 1 ஏக்கர் 98 சென்ட் மானாவாரி நிலத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் எனது சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் நான் கூறுவதுபோல் நான் தாவா சொத்தில் நெல் காயவைப்பது வழக்கம் என்றும் அதற்கு இடையூராக மாசி சிவராத்திரிக்கு வந்து தங்கி சாமி கும்பிடும் நபர்கள் கண்ணாடி பாட்டிலை போட்டு உடைத்துவிடுவதாகவும் அது எனது விவசாயத்திற்கு இடையூராக இருப்பதாகவும் சொல்லியிருப்பது பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. கண்ணாடி பாட்டில் உடைத்து போடுவதாக சொல்லி நான் இதுவரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் எந்தசங்கதியும் நடைபெறவில்லை என்றாலும் அதுபோல் நடைபெற்று இருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் 2015 ஆம் ஆண்டு இருதரப்பினருக்கு பிரச்சனை ஏற்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும் நானும் அங்கு சென்றிருந்தேன் என்று சொல்லுவதால் நான் தான் அந்த பிரச்சனைக்கு காரணம் நான்தான் என்றாலும் நான் அதில் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றாலும் வாதி எனது சமூகத்தை சார்ந்தவர் என்பதாலும் எனது உறவினர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6** முதல் **8** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வாதி எனது உறவினர் என்றால் சரிதான். வாதி  அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து பாறையாக உள்ளது. தாவா சொத்து பொன்னாட்சிகுளம்  என்று வருவாய் ஆவணங்களில் உள்ளது என்றாலும் நான் கூறுவதுபோல் பாறை என காணப்படவில்லை என்றாலும் சரியல்ல. பொன்னாட்சிகுளம் என்பது பாறைக்கு மேல்புறம் உள்ளது. பொன்னாட்சிகுளம் எவ்வளவு பரப்பளவு என்றால் சுமார் 5 ஏக்கர் இருக்கும். பொன்னாட்சிகுளத்தில் கட்டுப்பட்டது தான் பாறை என்றால் சரியல்ல. பொன்னாட்சிகுளத்தில் கட்டுபட்டது தான் பாறை என்றாலும் அதை வாதி ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. எனக்கு தாவா சொத்தின் அருகில் கிழக்கு பக்கம் நிலம் இருப்பதாக சொல்லுவதால் அது எந்த வருவாய் கிராமத்தை சேர்ந்தது என்றால் பூதமங்கலம் வருவாய் கிராமத்தை

சேர்ந்தது. எனக்கு அவ்வாறு நிலம் இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொன்னாட்சிகுளம் கண்மாயில் அமைந்துள்ள பாறையில் அனைத்து சமூக மக்களும் வருடம் ஒருமுறை வழிபாடு நடத்துவது வழக்கம் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா பாறையில் வேல்கம்பு, அருவாள் ஆகியவை எனக்கு 10 வயது இருக்கும் முன்பே இருக்கிறது என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனக்கு தற்போது 61 வயது ஆகிறது. அந்த பாறை யில் சாமி கும்பிடுவது சம்மந்தமாக வாதி தரப்பினருக்கும் 1 முதல் 4 பிரதிவாதிதரப்பினருக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்து சமாதான கூட்டம் போடப்பட்டது என்றால் சரிதான். அந்த சமாதான கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்தில் ஆக்கிரமித்து வீடுகட்டியுள்ளார் என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.